<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 82/2023 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.குமரேசன் | | | |
| **Date** | : | **12.03.2026** | | | |
| **Time** | : | **11.33 a.m to 11.42 a.m** | | | |

<u>நி.த.சா.**1.**திரு.குமரேசன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். முதல் நிலை விசாரணை</u>

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மனுதாரரின் பெயர் எனக்கு தெரியும் அவர் பெயர் பாலாஜி. உள்துறை விசாரணையின் போது நடைபெற்ற விசாரணையில் நான் விசாரணை அதிகாரி இல்லை. விசாரணையின் போது கலந்து கொண்ட விசாரணை அதிகாரி வழக்கறிஞரின் பெயர் B.சுரேஷ். விசாரணை அதிகாரியை சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் இல்லை. சேதுராமன் என்கிற சீனியர் எக்ஸிக்யூட்டிவ் Security Officer விசாரணையின் போது கலந்து கொண்டார் என்றால் ஆமாம். அவர் வேலையை ராஜினாமா செய்து விட்டார். அவரை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைத்தோமா என்றால் இல்லை. உள்துறை விசாரணை நடைபெற்ற ஏழு நாட்களில் நான் நிர்வாக பிரதிநிதியாகவோ நிர்வாக தரப்பு சாட்சியாகவோ விசாரணை அதிகாரியாகவோ கலந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். என்னுடைய

பிரமாண வாக்கு மூலம் சாட்சியம் பத்தி 26-ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். விசாரணை அறிக்கையின் அடிப்படையில்தான் அதனை தெரிவித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின் விவரங்கள் எனக்கு கோப்புகளின் அடிப்படையில் தான் தெரியும். உள்துறை விசாரணை முறையாக நடைபெற்றதா இல்லையா என்பது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க தகுதியானவர் நிர்வாக பிரதிநிதி அல்லது உள்துறை விசாரணையின் போது கலந்து கொண்ட நிர்வாக தரப்பு சாட்சிகள் மட்டும்தான் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல. இந்த நீதிமன்றத்தில் எவ்வாறு முறையற்ற விதத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளாரோ அதேபோன்றுதான் உள்துறை விசாரணை என்பது மனுதாரருக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படாமல் முறையற்ற சாட்சிகள் விசாரிக்கப்பட்டு முடிவு காணப்படுள்ளது என்றால் தவறு.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.03.12 18:38:01 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:12.03.2026.